**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

CC.No.59/2023

தேதி: 26.02.2025

**அ.சா.2 – ஜானகி, க/பெ.வைத்தீஸ்வரன்**

**1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு சொந்த ஊர் நத்தமேடு. திருமணம் செய்து கொடுத்த ஊர். எந்த வருடம் திருமணமானது என நியாபகமில்லை. என் மகனுக்கு 45 வயதாகிறது. எனக்கு திருமணமாகி என் கணவரை விட்டு எத்தனை ஆண்டுகள் பிரிந்து உள்ளேன் என்றால் பிரியவில்லை. போவோம். வருவோம். என் மகன் என் அம்மா ஊரில் படித்தார். போக்குவரத்து வசதியில்லாததால் அங்கு சேர்த்தோம். எனக்கு ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றில் குச்சிபாளையம் முகவரி தான் உள்ளது. என் தங்கை என்னுடன் வசித்து வருகிறார்.

2. சம்பவ இடமான பம்புசெட் சம்பந்தமாக பிரச்சினை நடந்தது எந்த சர்வே எண் என்று தெரியாது. அந்த இடம் சம்பந்தமாக மல்லிகா என்பவர் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் நாங்கள் வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தி வருகிறோம். இந்நீதிமன்ற அ.வ.எண்.22/2022 வழக்கில் இ.ம.எண்.02/2022 மனுவில் 15.06.2022 ம்தேதி சம்பவ இடத்திற்குள் நாங்கள் அத்துமீறி நுழையக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு இருப்பதால் உள்ளே நுழையக்கூடாது என சொன்னார்கள். நான் விவரம் தெரிந்து, எதிரிகளை அந்த இடத்தில் இருந்த வெளியேற்ற வேண்டி, அவர்களை நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக, நானும், எனது தங்கையும், எனது மகன் ஜெகதீசனும் அடித்தோம் என்றால் சரியல்ல.

3. ஜானகிக்கு 10 தையல் போட்டார்கள். ராஜ் ஆர்த்தோ மருத்துவமனைக்கு மாயனூரை சேர்ந்த ராஜேஷ் சொல்லி சேர்ந்தோமா என்றால் நாங்கள் தான் அவசரமாக சென்று சேர்ந்தோம். தையல் போடும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. தையல் போட்டபிறகு பார்த்தேன். ICU வார்டில் 3 நாட்கள் இருந்தார். நான் பார்த்துகொண்டேன். சம்பவத்தின்போது ஜெகதீசன் 5 நிமிடத்தில் எங்களை காப்பாற்றிவிட்டாரா என்றால் போன் செய்து அழைத்தபோது வந்தார். சம்பவ சமயத்தில் எதிரிகளுக்கு காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ்ல் சென்றார்களா என்றால் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். அவர்கள் எவ்வாறு சென்றார்கள் என்று தெரியாது.

4. நாங்கள் எதிரிகளுக்கு காயம் ஏற்படுத்தியதாக எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் தெரியுமா என்றால் பெயர் எழுதினார்கள். கேஸ் போட்டார்களா என தெரியாது. என் மீது வழக்கு தாக்கல் செய்து, நான் இன்று கூட நீதிமன்றத்தில் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். எதிரிகளை தாக்கியதாக, என் மீது 2–3 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் ஒரு அரசியல்வாதியின் உதவியுடனும், காவலர்களின் உதவியுடனும் இந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றும், இல்லையென்றால் குச்சிபாளையத்திற்கு அனுப்பியிருப்பார்கள் என்றால் சரியல்ல.

5. அதனால்தான் சம்பவ நடந்த நாளான 12.03.2023 அன்று நாங்கள் எதிரிகளில் 1, 2ம் எதிரிகளை கம்பி, குச்சி போன்ற ஆயுதங்களால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்திவிட்டு, அந்த குற்ற சம்பவத்திலிருந்து தப்பிப்பதற்காக, அரசியல்வாதியின் உதவியோடு, காயமே ஏற்படாமல் காயம் ஏற்பட்டது போல் தனியார் மருத்துவமனையில் சான்றிதழ் பெற்று, எதிரிகள் மீது இவ்வாறான பொய் வழக்கை காவல்துறை உதவியுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. எனது மகன் ஜெகதீசன் இவ்வழக்கின் எதிரிகள் மூவர் மற்றும் சாவித்ரி என்பவர் மீது பாகபிரிவினை வழக்கினை குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.186/2020ல் தாக்கல் செய்து அந்த வழக்கானது 10.04.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எனக்கு பிரச்சினை நடந்த இடத்தில் எவ்வித உரிமையும் இல்லாமல், சொத்தை அபகரிக்கவே சம்பவ நாள் அன்று எதிரிகளை நான் தாக்கிவிட்டு, அந்த குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது இவ்வாறான பொய்யான சங்கதிகளை கால்துறையினர் உதவியுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

7. சம்பவ இடமாக சொல்லப்படும் இடமானது சர்வே எண்.64/1A1ல் மற்றும் 6 சொத்துகள் சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தில் 05.04.2022 அன்றே உறுத்துகட்டளை வழக்கு தாக்கல் செய்து 15.06.2022 அன்று எங்களுக்கு எதிராக 3 எதிரிகளும் தடை உத்தரவு பெற்று, அந்த தடை உத்தரவானது இதுநாள் வரை எந்த நீதிமன்றத்தாலும் மாற்றி அமைக்காமல் உள்ள பட்சத்தில் நான் தடை உத்தரவை மீறி எதிரிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றத்தை மறைப்பதற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. இந்த சம்பவம் முற்றிலும் பொய் என்பதனாலும், நாங்கள் எதிரிகள் மீது செய்த குற்றத்தை மறைப்பதற்காகவும் ஜோடிக்கப்பட்ட பொய்யான வழக்கு என்பதால் தான் எங்கள் முதல் விசாரணைக்கும், முதல் தகவல் அறிக்கை மற்றும் போலீசார் விசாரணையில் உள்ள சங்கதியில் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. தடை உத்தரவு பெற்ற இடத்தில், நான், ஜெகதீசன், மேனகா, இந்திராணி அனைவரும் சேர்ந்து 1 மற்றும் 2 எதிரிகளை குச்சி, இரும்பு கம்பி மற்றும் கம்புகளால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி அந்த கொடுங்காயத்திற்கு, 1 மற்றும் 2 எதிரிகள் 20 நாட்களுக்கு மேல் மருத்துவமனையில் இருந்து எங்கள் மீது புகார் கொடுத்து குற்ற எண்.92/2023 பதிவு செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.